# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஸிவ்முனிஸே வெஹெர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, நவெம்பர் மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 50.00**

## 2014 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஶிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*[2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.ஓ.(கூட்.) 33/2013*

### ஶிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

“ஶிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றம்” என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப் பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அதனது குறிக்கோள்களையும் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதுவரை இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்: *முன்னுரை.*

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அவ்வொழுங்கமைப்பு கூட்டிணைக்கப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனு மதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஶிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஶிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட் களும், (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “ஶிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றம்” என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா *ஶிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

2-PL 007414 -800 (2014/10)

வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக் கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(2) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங் களுக்காகவும் கூட்டுத்தாபனமானது வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடை யனவாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) அம்பாறை நவகம்புரவில் அமைந்துள்ள ஸிவ்முனிஸே வெஹெர பௌத்த மன்றத்தில் செயற்பாடுகளை பேணுதல் ;

(ஆ) ஒழுக்கமானதும் மதசார்பானதுமான சமூகத்தை உறுதிப்படுத்துவதற்கு பௌத்த மதத்தின் பற்றாளர் களை ஒழுங்குபடுத்துதல் ;

(இ) பின்வருவனவற்றை அத்தகைய அதிகாரசபைகளின் சம்மதத்துடன் தோதான அதிகாரசபைகளுக்கு உதவுதல் -

(i) பௌத்தத்துடன் தொடர்புபட்ட புனித இடங் களையும் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த நினைவுச்சின்னங்களையும் பாதுகாத்தல் ; அத்துடன்

(ii) தேசிய வளங்களைப் பேணுவதற்கு பௌத்த மதப் பற்றாளர்களை அறிவூட்டுதல்.

மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல்.

**4**. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கவேண்டிய அல்லது நியமிக்கப்படவேண்டிய சொல்லப்பட்ட விதிகளில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான பதவிதாங்குநர்கள் மற்றும் அத்தகைய எண்ணிக்கையான வேறு உறுப்பினர்களையும் கொண்டமைந்த (இதனகத்துப்பின்னர் ''குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறைவேற்றுக்குழுவினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடனடுத்து நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் நிறைவேற்றுக்குழு, 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிகளினால் ஏற்பாடு செய்யப்படும் முறையில் முதலாவது குழு தெரிவுசெய்யப்படும் வரை கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழு செயலாற்றுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழு, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைநர்களும் உட்பட, குழுவின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைநர், சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும்பட்சத்தில் கூட்டுத் தாபனம், கூட்டுத்தாபனத்தின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறு கின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறா தெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத் தின் பொதுத் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத் தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றத்திற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்யவும் புரியவும் நிறைவேற் றவும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டுத்தாப னத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும் ;

(ஆ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப் பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும் :

ஆயின், குழுவானது, கூட்டுத்தாபனத்துக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகளையும் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக் கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினருக்குப் பயிற்சி யளித்தலும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப் பினர்களை அனுமதித்தல், அவர்கள் விலகுதல், அவர்களைப் பதவி விலக்கல் மற்றும் செலுத்தப் படற்பாலதான உறுப்புரிமைக் கட்டணம் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும் குழுவினதும் உறுப்பினர் களின் தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(இ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர் கள் பதவி துறத்தல், பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படுதல் மற்றும் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் நடத்தை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் மற்றும் குழுவினதும் கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அவற்றிற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், நடத்தையும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் அத்துடன் அதனது நிதிகளின் கட்டுக்காப்பும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் அவை திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

**8**. குழுவானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும் ; இதில் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும். உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்கு கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புக்கள், மாற்றுதல்கள், நன்கொடைகள், சந்தாத் தொகைகள், உதவுதொகைகள், கட்டணங்கள், மானியங்கள் அல்லது வேறு நிதிசார் முதலீடுகள் என்ற வழிவகையாக பெறப்பட்ட எல்லாப் பணங்களும், குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிக்கையிலும், புரிதலிலும், நிறைவேற்றுவதிலும் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும், கணக்காய்வும்.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம், அதன் வருமானங்களும் செலவினங்களும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தகைமை பெற்ற கணக்காய்வாளர்'' என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின்

உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ள வருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக வும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவை யினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளரோ அக்கணக்காளர் கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

வருடாந்த அறிக்கை.

**11**. (1) குழுவானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கு, அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப் பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப் புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத் துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற் பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச் சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத் தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலா மென்பது.*

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம், ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப் பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடைய தாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணங்களையும், ஆதனத்தையும் பயன்படுத்தல்.*

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாப னத்தின் இலச்சினை.*

**15.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, குழுவின் இரு உறுப் பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்த மைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண் டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை குழுவினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான குழுவின் அத்தகைய பதவிதாங்குந ரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**16.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படுதல் ஆகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக் கூட்ட மொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசின் உரிமைகளைப் பேணுதல்.*

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்து தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்